**தலைப்பு 54 – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் திறைசேரி அச்சிட்டுக் குறிப்பின் பிரகாரம் அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களுக்கு இடையே ஆரம்ப மீதி ரூபா 202,241,262 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டலுக்கு இணங்கவும் திறைசேரி கணக்குகளுக்கு இணங்கும் வகையில் முடியுமானவரை சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அமைச்சு 2019 ஆம் ஆண்டின் போது மெஹவர பியஸ கட்டிடத்திற்கு மாற்றும் போது அமைச்சின் பழைய கைதவிரப்புக்களின் பெறுமதி மற்றும் தொழில் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களின் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டதுடன் புதிய கட்டிடத்தின் சொத்துக்களின் பெறுமதி சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துகளின் பெறுமதி சரியாக இருப்பதுடன் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் சொத்துக்களின் கீழ் திறைசேரி அச்சிட்டுக் குறிப்பின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவையான ரூபா 218,772 தொகை குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 218,772 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஏசீஏ – 3 மாதிரியின் பிரகாரம் ரூபா 218,773/- ஆன தீர்வு செய்யப்படாத உப கட்டுநிதி கணக்கு கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. இது தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டுநிதியாகும். ஆதலால் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பொறுப்பாக காண்பிக்கப்பட்டுள்ளது. |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதியான ரூபா 218,772 பெறுமதி பிரதிபலிக்கும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தெளிவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டலுக்கு இணங்கவும் திறைசேரி கணக்குகளுக்கு இணங்கும் வகையில் முடியுமானவரை சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | தேர்தல் கடமைக்காக கொடுப்பனவிற்குரிய தீர்வு செய்யப்படாத முற்பண மீதியான ரூபா 218,773 தொகைக்கான காசோலை 2020.01.23 ஆந் திகதி அமைச்சிற்கு கிடைத்திருந்தது. ஆதலால் 2019 திசெம்பர் 31 இல் தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதியாக காண்பிக்க இயலுமை இல்லயென சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றேன். |

**1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் 2019 ஆம் ஆண்டிற்காக 05401 ஆம் இலக்க முற்பணக் பீ கணக்கு திறைசேரினால் விநியோகிக்கப்பட்ட இறுதி கணனி அச்சீட்டில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் இணங்கவில்லை யென்பது அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டலுக்கு இணங்கவும் திறைசேரி கணக்குகளுக்கு இணங்கும் | அமைச்சினால் 2019 ஆம் ஆண்டிற்காக 05401 ஆம் இலக்க முற்பணக் பீ கணக்கு திறைசேரினால் விநியோகிக்கப்பட்ட இறுதி கணனி அச்சீட்டினை அடிப்படையாகக் கொண்டு |

| | | |
|---|---|---|
| அதன் பிரகாரம் வரவுப் பதிவின் கீழ் பணமாக செலவிடப்பட்ட செலவினம் (11) ரூபா 3,000,173 தொகை திறைசேரியை விட குறைத்தும் குறுக்குப் பதிவு கொடுப்பனவு (12) இன் கீழ் ரூபா 3,210,242 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே செலவுப் பதிவுகளின் கீழ் பெறுவனவுகளுக்குரிய தொகையில் கிடைத்த பெறுமதி ரூபா 960,156 திறைசேரியை விட குறைவாகவும் குறுக்குப் பதிவு பெறுவனவு (12) இன் கீழ் ரூபா 1,170,256 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வகையில் முடியுமானவரை சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2019 முதல் அரைப்பகுதியில் 19301 மற்றும் இறுதி பகுதியில் 05401 இற்கான கணனி அச்சீட்டுக் குறிப்பு 12 மாதங்களுரியதாக தயாரிக்கப்பட்டிருந்ததாக சுட்டிக் காண்பிக்கப் பட்டிருந்தது. மேலும் அங்கு 193 தலைப்பிற்குரிய பணமாக கொடுப்பனவு மற்றும் பெறுவனவு 54 தலைப்பிற்குரிய திறைசேரியால் மாற்றும் போது (11) ஊடாக அல்லாமல் குறுக்குப் பதிவு கொடுப்பனவு (12) இன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை இதற்காக காரணங்களாக இருந்தது. |

### 1.6.4 கணக்கீடு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றிதழ்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணிச் செல்வதற்கு வேண்டிய மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து அதன் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371 (5) இன் பிரகாரம் அனைத்து கட்டுநிதி மீதிகளுக்குரிய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி 218,773 ஆக இருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் கட்டுநிதி ஆண்டின் இறுதிக்கு முன்னர் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கட்டுநிதி மீதி தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்திடமிருந்து நிரப்ப வேண்டிய கட்டுநிதி மீதியாகும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 28,250,000 ஆன நிதிஏற்பாட்டில் ரூபா 22,445,260 சேமிக்கப்பட்டிருந்தது. அது 49 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. மேலும் 11 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 24,301,955 நிதிஏற்பாட்டில் ரூபா 8,196,821 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. இச்சேமிப்பு 31 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சினை எடுத்திருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு இயலுமானவரை நடைமுறைச் சாத்தியமாக தயாரிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மூலதனச் செலவின விடயங்களில் நிதிஏற்பாடு 2019.04.08 ஆம் திகதிய 03/2019 மற்றும் 05/2019 ஆம் இலக்க செப்தம்பர் 29 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிப்பதற்கு நேர்ந்தது. இதற்கு மேலதிகமாக கட்டுநிதி கிடைக்காமை மற்றும் சில செலவின விடயங்களில் செலவினம் முகாமைத்துவம் செய்யப்பட்டமை நிதிஏற்பாடு சேமிப்பிற்கு காரணமாகும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th>கணக்காய்வு அவதானிப்பு<br>-------------------------------</th><th>பரிந்துரை<br>--------------</th><th>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>-------------------------------------------------------------</th></tr>
<tr><td>(அ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 பிரிவின் பிரகாரம் கடப்பாடு அல்லது பொறுப்புக்கள் கூற்றின் மூலம் அறிக்கையிடாத பொறுப்புக்கள் அல்லது கடப்பாடு முன்னைய ஆண்டின் செலவினமாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்வு செய்யப்பட முடியாது. நிதிக் கூற்றுக்கள் மற்றும் திறைசேரிக் குறிப்புக்களில் குறிப்பிடப்படாத 2 சந்தர்ப்பங்களுக்கரிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 258,627 தொகை கணக்காய்வின் போது ஆவதானிக்கப்பட்டது</td><td>அமைச்சினால் ஒவ்வொரு நிதியாண்டிலும் தீர்வு செய்வதற்குள்ள பொறுப்புக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நிரூபணமாக்கப்பட வேண்டும்.</td><td>கீழே காட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் தவிர ஏனைய அனைத்துப் பொறுப்புக்கள், பொறுப்புக்கள் பதிவேட்டிலும் நிதிக் கூற்றுக்களிலும் திறைசேரி குறிப்புக்களிலும் தெளிவாக எம்மால் காட்டப்பட்டுள்ளது.
<table>
<tr><th>செலவின விடயம்<br>---------------------</th><th>நிறுவனத்தின் பெயர்<br>-------------------------</th><th>பெறுமதி<br>--------------<br>(ரூபா)</th></tr>
<tr><td>054-1-2-1001</td><td>தலைவர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை</td><td>224,910.76</td></tr>
<tr><td>054-1-2-1003</td><td>தலைவர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை</td><td>33,716.12</td></tr>
</table>
தேசிய அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து மேலே குறிப்பிடப்பட்ட தொகை ஜே.சீ.எச் ஜயசிங்ஹ அவர்களுக்கு 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எமது அமைச்சினால் அத்தொகை மீள்நிரப்பல் மேற்கொள்ளப்படுகின்றது. திறைசேரியால் அவ்வப்போது அமைச்சிற்கு வழங்கப்பட்ட கட்டுநிதி போதியளவு இல்லாமையால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள்நிரப்பல் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது.</td></tr>
<tr><td>(ஆ) நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத 7 சந்தர்ப்பங்களுக்கு உரிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 651,648 ஆக இருந்தது.</td><td>- மேற்படி -</td><td>7 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 651,648 தொகை நிதி அமைச்சிற்குரியதாக இருந்ததுடன் அச்சந்தர்ப்பத்தில் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தவறியிருந்த போதும சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

## 2.4 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சேவையில் ஈடுபட்டிருக்கையில் ஊழியர்களுக்கு ஆபத்தில்லாத மற்றும் பயங்கரமான விபத்துக்கள் காரணமாக தொழில்கொள்வோர் நிறுவனங்களிடமிருந்து நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் அறவிட்ட தொகையிலிருந்து 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி ரூபா 8,451,277 தொகை தீர்வுசெய்யப்படாமல் காணப்பட்டது. ஊழியர்களும் அவர்களில் தங்கி வாழ்போரும் சரியான தகவல்களை வழங்காமை, நலனாலிகளின் இழப்பட்டுத் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு உரிய ஆவணங்களில் குறைபாடுகள் மற்றும் அவற்றை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களினால் இந்த இழப்பீட்டுத் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு முடியாமல் காணப்பட்டதுடன் அதன் தாமதகாலம் 02 மாதஙங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலவீச்சு எடுத்திருந்தது. | திடீர் விபத்துகளினால் விபத்திற்குட்படும் மரணிக்கும் ஊழியர்களின் தங்கியிருப்போருக் காக துரிதமாக நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விபத்துக்களிலிருந்து மரணிக்கும் ஊழியர்களுக்கு உரித்தாகும் இழப்பீடு இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நீதிமன்ற பரிசோதனையொன்று மூலம் உரிய உரித்தாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கட்டளை கிடைத்ததன் பின்னர் அந்த உரித்தாளர்களின் வங்கிக் கணக்கிற்கு உரிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அக்கணக்கிற்கு செலவு வைக்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீட்டு தொகை கொடுப்பனவு செய்யாமையால் 11 நீதிமன்றங்களுக்குரிய 51 வழக்குகளுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டு 11 ஆண்டுகளுக்கும் 21 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியொன்று கடந்திருந்த போதும் அறவிடப்படாத தொகை ரூபா 2,326,741 ஆக இருந்தது. | - மேற்படி - | தொழிலாளர் இழப்பீடு நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் 30 நாட்களுக்குள் இழப்பீட்டுத் தொகையை செலுத்தாவிட்டால் தொழில்கொள்வோரின் அசையாத சொத்துக்களை தடைசெய்து ஏலத்தில் விற்று அப்பணத்தை அறவிடுவதற்காக தொழில்தருனர் குடியிருக்கும் பிரதேசத்திற்குரிய நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு பிடியாணையொன்று |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்படும். சிவில் நீதிமன்ற நடைமுறையின் பிரகாரம் பிடியாணையை பிறப்பிக்கும் பொறுப்பு ஊழியர் தரப்பினராக இருப்பதுடன் இது தொடர்பாக நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு அறிவூட்டிய போதிலும் அவர்கள் அதற்காக முன்வராத காரணத்தினால் அப்பிடியாணையை செயற்படுத்தப்பட முடியாதுள்ளது. |
| (இ) | இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு இழப்பீடு வைப்புச் செய்யப்பட்ட போதும் உரிய தங்கியிருப்போரை தேடிக் கொள்வதற்கு முடியாமையால் இழப்பீட்டுத் தொகையை பகிர்ந்தளிக்கப்படாமல் தேசிய சேமிப்பு வங்கியின் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் வெவ்வேறாக 6 கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 1,892,127 ஆக இருந்தது. | - மேற்படி - | நீண்டகாலமாக இழப்பீட்டாளர்கள் அப்பணத்தை பெற்றுக் கொள்ளாமை காரணமாக அவர்களின் இழப்பீட்டுத் தொகையை நலனொன்றை பெற்றுக் கொள்ளும் வகையில் தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் பெயரில் இச்சேமிப்புத் தொகை வைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் மீளச் செலுத்தும் போது அதற்கான வட்டியையும் இழப்பீட்டாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகினற்து. |
| (ஈ) | தொழிலில் இருக்கும் போது ஏற்பட்ட பயங்கர விபத்துக்கள் காரணமாக இறந்த ஊழியர்களின் பராயமடை யாதவர்களுக்கு உரித்தான இழப்பீடு வயது பூர்த்தியடைந்ததன் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போதும் வயது பூர்த்தியாகி நலன்கள் விடுவிக்கப்படாத 392 கணக்குகளில் காணப்பட்ட இழப்பீட்டுத்தொகை ரூபா 10,388,836 ஆக இருந்தது. | - மேற்படி - | கணக்கு ஆரம்பிக்கப்பட்டு 40 இற்கும் 50 ஆண்டுகள் கடந்திருந்தமை, கணக்கு உரிமையாளர்கள் வெளிநாடு சென்றிருந்தமை, சில கணக்கு உடையோர் மரணித்திருந்தமை காரணமாக நலன்களை விடுவிக்க முடியாமல் இருந்தது. |

## 2.5 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையை விட்டுச்சென்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 138,501 தொகையை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.4.1 பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போதய கடன் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கும் பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். | சட்டமா அதிபர் அலுவலகத்தின் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட C/DC/111/2018(LS) மற்றும் 2020.01.31 ஆந் திகதிய கடிதத்திற்கு பதிலாக ML/AD/02/06/III மற்றும் 2020.02.12 ஆந் திகதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 114,575 தொகையை அறவிடுவதற்கு 2020 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | இந்த உத்தியோகத்தர் சேவையை வரிதாக்கிச் சென்றுள்ளார் எனக் கருதியதாக இரத்மலான பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தடமிருந்து பெற்றுக் கொண்ட தொழில் அமைச்சின் செயலாளர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகன அட்டவணையில் காணப்பட்ட 09 வாகனங்கள் தற்போது அமைச்சிடம் காணப்படவில்லை. | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் பௌதீக இருப்பு மற்றும் அவற்றின் தற்போதய பயன்பாடு தொடர்பாக நாளதுவரையான தகவல்கள் பேணப்பட வேண்டும் | இவ்வாகனங்கள் தொடர்பாக காணப்படும் கோவைகள் தொடர்பில் தற்போது பரிசோதனை நடாத்தப்பட்டு வருகின்றது. |